பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 30 வியாழக்கிழமை 13.05.2021 கதிர் 55

## சகல பிரஜைகளுக்கும் தடுப்பூசி வழங்கப்படும்

### இராணுவத் தளபதி உறுதி

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி அவசியமான அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படும் என்று கொரோனாத் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

☞2

# 3 நாள்களும் அனைத்து கடைகளும் பூட்டு!

### 17ஆம் திகதி முதலே 'அடையாள அட்டை' நடைமுறை அமுல்



நாட்டில் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள இன்றிரவு 11 மணி முதல் 17ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை மக்கள் நடமாட்டம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் எனவும், இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு வர்த்தக நிலையத்தையும் திறக்க முடியாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இன்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இன்றிரவு 11 மணி முதல் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிவரை அமுல்படுத்தப்படும் தொடர் முழு நேரப் பயணத் தடையின்போது மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். இக்காலப்பகுதியில் வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படாது. அனைத்துக் கடைகளும் மூடப்பட வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே போக்குவரத்துகளை மேற்கொள்ள முடியும். பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு

☞2

## கொரோனாவால் மேலும் 11 பிரதேசங்கள் முடக்கம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தையடுத்து மேலும் 3 மாவட்டங்களைச் சேர்ந்த மேலும் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இன்று காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

புதிதாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் வருமாறு:-

கம்பஹா மாவட்டத்தின், திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலுகஹவெல கிராம சேவகர் பிரிவு, காலி மாவட்டத்தின்,

☞2

## மேலும் 448 பேர் மாட்டினார்கள்!

நாட்டில் முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 448 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனடிப்படையில், கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதி வரை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 8 ஆயிரத்து 747 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில்

☞2

# முள்ளிவாய்க்கால் முற்றம் இரவோடிரவாகத் தகர்ப்பு!

### நினைவுக் கல்லும் காணாமல் ஆக்கப்பட்டது





(ந.லோகதயாளன்)

இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைவுகூர்ந்து முல்லைத்தீவு மாவட்டம், முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவு முற்றம் நேற்று இரவோடிரவாக சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னமும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

☞2

## 'கொரோனா'வை ஒழிக்க இலங்கைக்கு உதவுங்கள்

### பிரிட்டன் தூதுவரிடம் சஜித் வேண்டுகோள்



இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு

☞2

## அழிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை முள்ளிவாய்க்காலில் மீளமைப்போம்

### இன விடுதலையையும் நிலைநாட்டுவோம்; தமிழரசின் தலைவர் மாவை திடசங்கற்பம்



முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னம் இரவோடிரவாய் அழிக்கப்பட்டதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவருமான மாவை சேனாதிராஜா வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இன்று காலையில் மேலும் ஒரு நெஞ்சை உலுக்கும் செய்தி கிடைத்தது. மே - 18 முள்ளிவாய்க்கால்

☞2

### குற்றக் கும்பல் தலைவர்

## 'கொஸ்கொட தாரக' சுட்டுப் படுகொலை!

குற்றக் கும்பல் தலைவர் 'கொஸ்கொட தாரக' எனும் தாரக பெரேரா விஜேசேகர பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவின் தடுப்புக் காவலில் இருந்தபோதே, இவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

ஆயுதங்கள் சிலவற்றை மீட்பதற்காக மீரிகம பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது,

☞2

## தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பியவர்களுடன் நெருங்கிப் பழகிய நால்வர் தனிமைப்படுத்தலுக்கு

(ந.லோகதயாளன்)

தமிழகத்தில் இருந்து படகு வழியாகத் தாயகம் திரும்பியவர்களுக்கு உதவி புரிந்து நெருங்கிப் பழகிய நான்கு பேர் கடற்படையினரால் கொரோனாத் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனாத் தாக்கம் காரணமாக தினமும் ஆயிரக்கணக்கானோர் மரணிப்பதையடுத்து தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் உயிர் அச்சம் காரணமாக மீண்டும் தாயகம் நோக்கிப் படையெடுக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த ஒரு வாரத்துக்குள் 3ஆவது சம்பவத்தில் ஒரு படகு மூலம் ஊடுருவியவர்களைப் படகில் அழைத்து வந்தவர்கள், கூடப் பழகியவர்கள் என நால்வரைக் கைதுசெய்த கடற்படையினர் அவர்களையும் காரைநகரில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைத்து கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நால்வருடன் சேர்த்து மொத்தம் 9 பேர் தற்போது காரைநகரில் தங்கியுள்ள அதேநேரம் வவுனியா சிறைச்சாலையில் நால்வர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 3 நாள்களும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கப்படும். மருந்துப் பொருள்களை விநியோகிக்கவும் அனுமதி வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டையின் இறுதி எண்ணுக்கமைய வீட்டை விட்டு வெளியேறும் நடைமுறை 17ஆம் திகதி முதலே அமுல்படுத்தப்படும். மேற்படி மூன்று நாள்களுக்கு அந்த நடைமுறை பொருந்தாது. அனைவரும் வீட்டில் இருக்க வேண்டும் - என்றார்.

## ‘கொஸ்கொட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாரக பெரேரா பொலிஸாரைத் தாக்க முயன்றார் எனவும், அதன்போது பொலிஸார் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொஸ்கொட தாரகவின் பாதுகாப்பு குறித்து கவனம் எடுக்குமாறு, அவரது சட்டத்தரணி பொலிஸ்மா அதிபருக்கு நேற்று கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## சகல பிரஜை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்குப் பல்வேறு நாடுகளில் இருந்தும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தடுப்பூசி தேவைக்கு ஏற்ப எதிர்வரும் மாதங்களில் இரண்டாம் தொகை தடுப்பூசி கிடைக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி 13 லட்சமும், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி 6 லட்சமும் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொரோனாவால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஹங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந்துங்கொடை கிராம சேவகர் பிரிவு, கொவியபான கிராம சேவகர் பிரிவு, கஹவன்னகம கிராம சேவகர் பிரிவு, தொம்மங்கொட கிராம சேவகர் பிரிவு, ஹபராதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனுமோதர கிராம சேவகர் பிரிவு, பொனவிஸ்டா கிராம சேவகர் பிரிவு, கட்டுகுருந்த கிராம சேவகர் பிரிவு, இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெனகவக்க பாதகட கிராம சேவகர் பிரிவு, திப்பிடிகல கிராம சேவகர் பிரிவு, குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவிட்ட கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தெல்கமுவ பிரிவின் நகரப் பகுதி.

## மேலும் 448 பேர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட சுற்றிவளைப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## ‘கொரோனா’வை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த உதவியை வழங்குமாறு பிரிட்டன் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த சில நாள்களாக வெளிநாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களைச் சந்தித்து உதவிகளைக் கோரி வருகின்றார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி மருத்துவர் ஒலிவியா நிவேராஸ், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கினொன் மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோருடனும் சஜித் பிரேமதாஸ சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார்.

## அழிக்கப்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவிடத்தில் நிலைநட்டுள்ள சின்னங்கள் சிதைக்கப்பட்டுள்ளமையும், நிலைநாட்டவெனவிருந்த நினைவுக்கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுவிட்டமையும் எம் நெஞ்சை உலுக்கும் கொந்தளிக்க வைக்கும் நடவடிக்கைகளும் ஆகும்.

நேற்று இரவோடிரவாய் முள்ளிவாய்க்கால் முற்றத்தைச் சுற்றி இராணுவம் குவிக்கப்பட்ட நிலையில் இக்கொடிய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நாகரிகமற்ற எம் இனத்தின் ஆன்மத்தையே அழிக்கும் செயலை அனைவரும் நாகரிகமுள்ள உலகமும் கண்டித்தே ஆகவேண்டும். இதற்கான பொறுப்பை அரசு ஏற்றுப் பதிலளிக்க வேண்டும்.

இந்நாட்டில் தமிழினப் பிரச்சினை தீர்க்கப்படாமையினால் இடம்பெற்ற நீதிக்கான 70 ஆண்டுகள் போராட்டத்தின் உச்சநிலையில் இலட்சக்கணக்கான உயிர்கள், மனித குலம் அழிக்கப்பட்டமையை நினைவுகூரும் பண்பாடு, நாகரிகம், அந்த உறவுகளுக்கும் நீதிக்காய்ப் போராடும் திடசங்கற்பங் கொண்ட மக்களுக்கும் உள்ள உரிமையையும் அழிக்க எடுக்கும் இத்தகைய நடவடிக்கைகளை நாம் அனைவரும் எதிர்த்தேயாக வேண்டும்.

முள்ளிவாய்க்கால் மே - 18 நினைவுகூரும் அதேவேளை கொரோனா வைரஸ் - 19 தீவிரமடைந்துவரும் நிலையில் சுகாதார விதிமுறைகளை ஏற்று அமைதி வழியில் மக்கள், உறவுகள் வாழும் இடங்களில் நினைவுகூருவதற்கே அறிவித்தல் கொடுக்க எண்ணியிருந்தோம். கிறிஸ்தவ மத ஆயர்களும் அவ்வாறானதொரு காத்திரமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர். எவ்வாறாயினும் இனவிடுதலைப் போரில் அழிக்கப்பட்ட எம்மினத்தின் உறவுகள் தம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும் கண்ணீர் விட்டழுது ஆறுதல் பெறவும் உயிர்நீத்த உறவுகள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதற்கும் உள்ள மனித குல நாகரிகத்தை உரிமையை நாமுள்ள வரை நிலைநாட்டவும் திடசங்கற்பம் கொள்வோம்.

அரசு அதன் இராணுவம், பௌத்தர்களும் இவ்வாறம் முல்லைத்தீவில் குருந்தூர் மலைப்பிரதேசத்தில் சைவ மக்கள் வழிபாட்டுத்தலத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளையும் மீறி ஒன்று கூடி பௌத்த சிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளிலும், வழிபாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், இனவிடுதலைப் போரில் உயிர்களைப் பலிகொடுத்த உறவுகள் அந்த இன மக்கள் அவ்வுறவுகளை நினைவுகூரும் உரிமை பௌத்த சிங்கள அரசுகளால் மறுக்கப்படுவது மட்டுமல்ல அந்த நினைவுகூரும் மையங்கள் நினைவிடங்களும் அழிக்கப்படுகின்றன.

நாம் இந்நாளில் தொடர்ந்தும் மனித குலத்தின் தமிழ் மக்களின் பண்பாடு, நாகரிகத்தை நிலைநாட்டுவோம் எனவும், அழிக்கப்பட்ட நினைவிடத்தை - நினைவுச் சின்னங்களை மீள அமைப்போம் எனவும், இன விடுதலையை நிலைநாட்டுவோம் எனவும் திடசங்கற்பம் கொள்வோம் - என்றுள்ளது.

## முள்ளிவாய்க்கால் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, அங்கு புதிதாகக் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடுகை செய்வதற்காகப் பாரிய நினைவுக் கல் நினைவேந்தல் நிகழ்வு குழுவினரால் இராணுவத்தினரின் கடுமையான நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நேற்று மாலை அங்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. அதையடுத்து அங்கு நேற்று மாலை முதல் இராணுவத்தினர் பாதுகாப்பில் இருந்தனர். குறித்த பகுதி யாரும் நுழைய முடியாத பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றிரவு அந்த நினைவுக் கல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த நினைவு முற்றமும் சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தவறான கையாள்கை

உரியதை உரிய முறையில் உரிய காலத்தில் செய்யத் தவறினால் அதன் விளைவு மோசமானதாக இருக்கும்.

கொரோனாப் பெரும் தொற்றை ஒட்டி இப்பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டிய விடயம் இது.

இதனையே சுகாதாரக் கொள்கைகள் ஸ்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் ரவி ரன்னன்எலியவும் இப்போது சுட்டிக்காட்டுகின்றார்.

வெளிநாடுகளில் இருந்து வருகை தருபவர்கள் 14 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என அரசு இப்போது அறிவித்திருக்கின்றது.

மிகுந்த தாமதத்திற்குப் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்மானம் முன்னரே எடுக்கப்பட்டிருந்தால் பல நூற்றுக்கணக்கானோரின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று உண்மையை வெளிப்படுத்துகின்றார் அவர்.

தற்போது திரிவடைந்த வைரஸும் இலங்கையில் பரவி வருகின்றது. இதன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தப் பதினான்கு நாள் தனிமைப்படுத்தல் போதுமானதல்ல. அதனால் திரிவடைந்த புதிய வைரஸ் பரவிவரும் நாடுகளில் இருந்து வருகை தருபவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று சுட்டுகின்றார் வைத்திய நிபுணர் ரவி ரன்னன்எலிய.

கொரோனாப் பெருந்தொற்றுப் பரவலை ஒட்டி மருத்துவ, சுகாதார நிபுணர்கள் அவ்வப்போது அவசரமாக விடுத்த கோரிக்கைகள், வலியுறுத்தல்கள் தொடர்பில் அரசுத் தரப்பிலிருந்து – இவ் விடயங்களைக் கையாளும் பொறுப்பில் இருக்கும் அதிகாரப் பீடத்திலிருந்து – உரிய பதில்களோ, விளக்கங்களோ, வியாக்கியானங்களோ பிரதிபலிப்பாக காட்டப்படவில்லை. பல சமயங்களில் நிபுணர்களின் கருத்துக்கள், வலியுறுத்தல்கள் தொடர்பில் உதாசீனமான அல்லது புறமொதுக்கும் பதில்களே வெளிப்படுத்தப்பட்டன; வெளிப்படுத்தப்படுகின்றன.

நாட்டை சொற்ப காலத்துக்கு முழுவதுமாக முடக்கி, தற்போது பரவிவரும் கொரோனாத் தொற்றை முதலில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள் என்று பல தரப்பினாலும் கோரப்பட்டது. ஆனால் அரசுத் தரப்பில் இருந்து சரியான – தெளிவான – பதில் வரவில்லை.

நேரத்துடன் முடக்கினால், குறுகிய கால முடக்கத்துடன், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்றும் –

தாமதித்தால், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு நீண்டகால முடக்கம் கட்டாயமாகத் தேவைப்படும் என்றும் –

நிபுணர்கள் தரப்பில் விளக்கமளித்துச் சுட்டப்பட்டது.

நேரத்துடன் நாட்டை முடக்க மறுத்த அரசு இப்போது காலம் பிந்தி மாகாணங்களுடன் போக்குவரத்தை முடக்கியுள்ளது. அது மாவட்ட ரீதியிலும் கொண்டு வரப்படக்கூடும் என்று இப்போது ஆறுதலாக ஆளுடம் கூறுகின்றது அது.

இரண்டு, மூன்று நாள்கள் தொடர் விடுமுறை, முஸ்லிம்களின் பண்டிகை நாள் என்றவுடன் போக்குவரத்துக் கட்டுப்பாடு என்று அறிவிப்பு விடுகின்றது. அது ஊரடங்கு அல்லவாம். அத்தியாவசிய சேவைகள் தங்கு தடையின்றி நடக்குமாம்.

மற்றைய நாள்களில் அடையாள அட்டை இலக்கங்களில் கடைசி இலக்கம் ஒற்றை எண் கொண்டவர்கள் ஒற்றை எண் திகதிகளிலும், இரட்டை எண் கொண்டவர்கள் இரட்டை எண் திகதிகளிலும் வீட்டுக்கு வெளியே வந்து போகலாம். எல்லா அறிவிப்புகளிலும் குழப்பம், தெளிவின்மை.

கொரோனாத் தடுப்பூசி விவகாரத்திலும்கூட நிலைமை அதுதான். தடுப்பூசி போடும் பணி மேல் மாகாணத்துக்கு வெளியே போகவில்லை. மேல் மாகாணத்திலும் குழப்ப நிலைமை. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் போடத் தொடங்கினார்கள். அது இருபத்தியைந்து வீதம் கூடப் பூர்த்தியாக முன்னர் அதனைக் கைவிட்டு விட்டு முப்பது தொடக்கம் அறுபது வயதானோருக்கு ஊசிபோடும் பணி தொடங்கி விட்டார்கள். இதுவரை மேல் மாகாணத்தில் ஊசி கிட்டாத அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு இனி எப்போது தடுப்பூசி என்பது தெரியவில்லை. அதிலும் குழப்பம்.

சீனத் தயாரிப்பான சினோபோர்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதியும், அங்கீகாரமும் அளித்திருப்பதாகக் கூறப்படும் விடயம் தொடர்பிலும் அரசின் அறிவிப்புக் குறித்து பல சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

இலங்கை அரசு தான் விரும்பினால், தனது சுய முடிவுக்கான அதிகாரத்தின் அடிப்படையில் அந்த மருந்தைப் பயன்படுத்த முடியும் என்பதுதான் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிலைப்பாடே தவிர, அந்த மருந்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம் அளித்துள்ளது என்பதல்ல என்று விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இப்படி கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டு விடயத்தில் ஆளும் தரப்பு – அதிகார பீடம் – சொதப்புகின்றது.

இந்த மெத்தனப் போக்கின் – பொறுப்பற்ற செயற்பாட்டின் – விளைவுகள் மொத்த நாட்டையும் மோசமாகப் பாதிக்கப் போகின்றன என்பதுதான் இதில் பொதிந்துள்ள துன்பியல் உண்மையாகும்.

# வடக்கில் கடற்படை தீவிர நடவடிக்கை
## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் தீர்மானம்



கடற்படை மற்றும் கடலோர காவற்படையின் முழுமையான ஒத்துழைப்புடன் வடக்கு கடல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளை பூரணமாக கட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், அமைச்சரின் யாழ். காரியாலயத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில், தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளான குலை போட்டு மீன் பிடித்தல், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், டயனமைற் பயன்படுத்தல், கரைவலை தொழிலுக்கு உழவு இயந்திரங்கள் பயன்படுத்தல் மற்றும் அனுமதி பெறாமல் சுருக்கு வலை தொழிலில் ஈடுபடுதல், அனுமதிக்கப்பட்டதை விடக் குறைந்தளவான அளவுள்ள வலைகளைப் பயன்படுத்துதல் போன்ற தொழில் செயற்பாடுகளை வடக்கு கடல் பிரதேசத்தில் கட்டுப்படுத்துவதற்கான கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்படுமானால், 021 750 8055, 011 309 1815, 026 776 9100 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தகவல் தெரிவிக்குமாறும் கடற்றொழிலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம்
## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அஞ்சலி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாளான நேற்று (புதன்கிழமை) நினைவேந்தல் அஞ்சலி சுடரேற்றி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இந்த நினைவேந்தல் ஆரம்ப நாள் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் சிலர் கலந்துகொண்டனர்.



# முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் சிவாஜி அஞ்சலி




முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்று (புதன்கிழமை) ஆரம்பமான நிலையில் வல்வெட்டித்துறையில் நேற்று மாலை அவர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

# ஹற்றனில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள போடைஸ் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

ஹற்றன் போடைஸ் தோட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தமக்கான நிவாரணம் வழங்கப்படுவதில்லை எனக் குற்றம் சுமத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹற்றன் – டயகம பிரதான வீதியில் அமைந்துள்ள தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அந்த தோட்டத்தில் கொவிட் தொற்றாளர்கள் சிலர் அடையாளம் காணப் பட்டமையைத் தொடர்ந்து என்பீல்ட் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட போடைஸ் தோட்டத்துக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் புதன் காலை பயணத் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து போடைஸ் தோட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

எனவே கடந்த பல நாள்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தாம் தோட்டத் தொழிலையும் இழந்து வருமானமில்லாது அவதிப்படுகின்றனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் மேற்படி பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி தீர்வைப் பெற்றுத் தருவோம் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஒன்று கூட முடியாது எனவும் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அறிவித்தனர். இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை மக்கள் கைவிட்டனர்.

# துறைமுக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுப்பு

கொவிட் தொற்று பரவலால் நாடு மிகவும் ஆபத்தில் இருக்கும் நிலையில், துறைமுக நடவடிக்கைகள் எந்த வகையிலும் சீர்குலைய இடமளிக்கப்படமாட்டாது என இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் பணியில் ஈடுபடுத்தி, இதுவரையிலும் துறைமுக செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றோம் எனவும் அதிகாரசபையின் தலைவர் ஓய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

# 2-18 வயதுக்குட்பட்டோருக்கும் தடுப்பூசிப் பரிசோதனை கொவேக்சினுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது

கொவேக்சின் தடுப்பூசியை 2 முதல் 18 வயதுக்குட்பட்டோருக்கும் செலுத்திப் பரிசோதிக்க இந்திய மருந்து மற்றும் தர நிர்ணய ஆணையம் அனுமதி தந்துள்ளது.

இந்தியாவில் தற்போது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள அனுமதி தரப்பட்டுள்ளது. இரண்டாவது அலை தீவிரமாக இருப்பதால் மூன்றாவது அலையும் தவிர்க்க முடியாதது என நிபுணர்கள் எச்சரித்துள்ளார்கள். அதில் சிறுவர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படலாம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இதனால், சிறுவர்களுக்கும் தடுப்பூசி போடுவது அவசியம் என வலியுறுத்தப்படுகிறது. எனவே, 2 வயது முதல் 18 வயதுக்குட்பட்டோருக்கும் கொவேக்சின் தடுப்பூசி செலுத்தி, முதல் கட்ட மருத்துவப் பரிசோதனையை அந்த நிறுவனம் மேற்கொண்டு வந்தது.

முதல்கட்ட மருத்துவப் பரிசோதனை முடிவுகளைச் சமர்ப்பித்து, இரண்டு மற்றும் மூன்றாவது கட்ட மருத்துவப் பரிசோதனைகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் என பாரத் பயோடெக் நிறுவனம் மத்திய மருந்து மற்றும் தர நிர்ணய ஆணையத்திடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த நிபுணர் குழு, 2 மற்றும் 3 ஆம் கட்ட மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதி வழங்கியுள்ளது. 2 ஆவது கட்டப் பரிசோதனை முடிவுகளைக் கொடுத்த பிறகு 3 ஆவது மற்றும் இறுதிக்கட்ட பரிசோதனையை மேற்கொள்ள வேண்டுமென நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை, டெல்லி, பாட்னா எய்ம்ஸ் மருத்துவமனை, நாக்பூர் மட்ரினா மருத்துவ அறிவியல் மருத்துவமனை ஆகியவற்றில் 525இற்கும் மேற்பட்டோரிடம் மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி உயிரிழப்பு

இந்திய மத்திய அரசின் புலனாய்வுத்துறையான சி.பி.ஐயில் 36 ஆண்டு காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற ரகோத்தமன், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தலைமை விசாரணை அதிகாரியாக இருந்தவர். ஓய்வுக்குப் பின்னர் சென்னை கே.கே.நகரில் வசித்து வந்த இவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.



72 வயதான அவர் கடந்த 8 ஆம் திகதி கொரோனா தொற்றால் பாதிக் கப்பட்டு, முதலில் வீட்டுத் தனிமையில் சிகிச்சை பெற்று வந்தார் எனவும் பின்னர் அவரது உடல்நிலை மோசம் அடைந்ததை யடுத்து சென்னை முகப்பேரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார் எனவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் ரகோத்தமன் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரகோத்தமன், தொலைக்காட்சி விவாதங்களிலும் சமூக ஊடகங்களின் கலந்துரையாடல்களிலும் தொடர்ச்சியாகப் பங்கேற்றுவந்ததால் அண்மைய வருடங்களில் பலருக்கும் பரிச்சயமானவராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணையின் அனுபவங்களை 'ராஜீவ்காந்தி கொலைவழக்கு மர்மம் விலகும் நேரம்' என்ற தலைப்பில் தமிழிலும், ஆங்கிலத்திலும் இவர் எழுதிய புத்தகம் பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருந்தது.

# அரசு விழாக்களில் என்னை மகிழ்விக்க புத்தகங்களைப் பரிசளிக்க வேண்டாம்!

## தமிழக தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தெரிவிப்பு

தனது புத்தகங்களை எந்த எக்காரணம் கொண்டும் அரசு சார்பில் வழங்க வேண்டாம் என தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ்., பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றியதோடு பல புத்தகங்களையும் எழுதியுள்ளார். சுய முன்னேற்றம், தன்னம்பிக்கைக் கட்டுரைகள், சிவில் தேர்வுகளை அணுகுவது குறித்து மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் கட்டுரைகள் உள்ளிட்ட பல நூல்களை வெ.இறையன்பு எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நான் பணி நேரம் முடிந்த பின்பும், விடுமுறை நாள்களிலும் எனக்குத் தெரிந்த தகவல்களை வைத்தும், என் அனுபவங்களைத் தொகுத்தும் சில நூல்களை எழுதி வந்தேன். இப்போதுள்ள பொறுப்பின் காரணமாக, பள்ளிக் கல்வித்துறைக்கு நான் ஒரு மடல் எழுதியுள்ளேன்.



நான் எழுதியுள்ள நூல்களை எக்காரணம் கொண்டும் எந்த அழுத்தம் வரப்பெற்றாலும், தலைமைச் செயலாளராகப் பணியாற்றும் வரை பள்ளிக்கல்வித்துறையின் எந்தத் திட்டத்தின் கீழும் வாங்கக் கூடாது என்கிற உத்தரவே அது. பார்ப்பவர்களுக்கு என் பணியின் காரணமாக அது திணிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றி களங்கம் விளைவிக்கும் என்பதால்தான் இத்தகைய கடிதத்தை எழுதியிருக்கிறேன். எந்த வகையிலும், என் பெயரோ, பதவியோ தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்பதே நோக்கம்.

அரசு விழாக்களில் பூங்கொத்துகளுக்குப் பதிலாக புத்தகங்கள் வழங்கினால் நன்று என்கிற அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணை அது. அரசு விழாக்களில் அரசு அலுவலர்கள் யாரும் என்னை மகிழ்விப்பதாக எண்ணி, என்னுடைய நூல்களை அரசு செலவிலோ, சொந்தச் செலவிலோ பரிசாக பூங்கொத்துகளுக்குப்பதில் விநியோகிக்க வேண்டாம் என்று அன்புடன் விண்ணப்பம் வைக்கிறேன்.

இவ்வேண்டுகோள் மீறப்பட்டால், அரசுச் செலவாக இருந்தால் தொடர்புடைய அதிகாரியிடம் அது வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும். சொந்தச் செலவு செய்வதையும் தவிர்ப்பது சிறந்தது. எனவே, இத்தகைய சூழலை எக்காரணம் கொண்டும் ஏற்படுத்த வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவைத் தாண்டி, இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களிடத்திலும் தனது எழுத்து மற்றும் பேச்சுக்கள் மூலம் வெ.இறையன்பு நன்கு அறிமுகமான ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பாதித்தவர்களுக்கு வரும் கறுப்புப் பூஞ்சைத் தொற்று

## உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியது என மருத்துவர்கள் எச்சரிக்கை!

இந்தியா முழுவதும் பரவிவரும் கொடிய கொரோனா ஏராளமான உயிரிழப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், புதிய அதிர்ச்சியாக கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களில் சிலர் மியூக்கோர்மைகோசிஸ் (Mucor mycosis) என்ற கறுப்புப் பூஞ்சைத் தொற்றுப் பாதிப்புக்கு ஆளாவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதிகப்படியான ஸ்டிராய்ட் மருந்துகளை எடுத்துக்கொள்வதால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து கறுப்புப் பூஞ்சை நோய் ஏற்படுகின்றது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பாதிப்பு மெல்ல மெல்ல உயிரையும் பறிக்கக் கூடியது என்ற அதிர்ச்சித் தகவலையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

தலைவலி, காய்ச்சல், கண்களுக்குக் கீழ் வலி மற்றும் பார்வைக் குறைபாடு ஏற்படுவது போன்றவை இந்தப் பூஞ்சைப் பாதிப்பினுடைய முக்கிய அறிகுறிகளாகக் கூறப்படுகின்றன. குறிப்பாக நீரிழிவு நோய் உள்ள வர்கள் இதனால் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் எனவே கொரோ னாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். மகாராஷ்டிராவில் இந்தக் கறுப்புப் பூஞ்சையால் பாதிக்கப்படுபவர்களுடைய எண்ணிக்கை கணிசமாகக் காணப்படுவதால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு விரைந்து எடுத்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநிலசுகாதாரத்துறை அமைச்சர் ராஜேஷ் தோபே அளித்த பேட்டியில், "தற்போது மகாராஷ்டிராவில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்களை கறுப்புப் பூஞ்சைத் தொற்று பாதித்து இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால் இந்த எண்ணிக்கை நிச்சயம் மேலும் அதிகரிக்கும். இந்த பூஞ்சைப் பாதிப்புக்கு ஆளாகுபவர்களில் 50 சதவீதம் பேர் இறப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது.

கறுப்புப் பூஞ்சைத் தொற்று காரணமாகப் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்ட மருத்துவமனைகளைப் பயன்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. காரணம், இந்த நோய்க்கு பலதரப்பட்ட சிகிச்சைகள் தேவைப்படலாம். குறிப்பாக, 'மியூக்கோர் மைகோசிஸ்' நோயாளிகளுக்கு காது, மூக்கு, தொண்டை மருத்துவர், கண் மருத்துவர் மற்றும் நரம்பியல் நிபுணர்களின் சிகிச்சைகள் தேவைப்படலாம் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த கறுப்புப் பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மெற்பட்டவர்கள் மும்பை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என மாநகராட்சி கூடுதல் கமினர் சுரேஷ் காகனி தெரிவித்திருக்கிறார். இவர்களில் பெரும்பாலானோர் மும்பைக்கு வெளியே வசித்து வருபவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சை; கேரள அரசின் கட்டண நிர்ணயத்துக்கு நீதிமன்றம் பாராட்டு




கேரள மாநிலத்தில் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையிலான வழக்கை கேரள உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த நிலை யில், மாநில அரசு நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

அதன்படி, தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான பொது விடுதிகளில், நாள் ஒன்றுக்கு 2,645 ரூபா மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சி.டி.ஸ்கான் உள்ளிட்ட பரிசோதனைகளுக்கும் அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்றும் உறுதிபடக் கூறப்பட்டுள்ளது.

இதனை மீறும் பட்சத்தில் மாவட்ட மருத்துவ அதிகாரி உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடம் புகார் அளித்தால், சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்திடம் பத்து மடங்கு அபராதம் வசூலிக்கப்படும் என்றும் கேரள அரசு, நீதிமன்றத்தில் விளக்கமளித்துள்ளது.

இதையடுத்து மருத்துவமனைகளின் கட்டணக் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்க, அரசு தகுந்த நடவடிக்கை மேற் கொண்டிருக்கின்றது என கேரள உயர்நீதிமன்றம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

# சனத்தொகையில் சீனாவை இந்தியா வரும் 2 ஆண்டுகளில் முந்திச்செல்லும்

## சீன அதிகாரிகள் கணிப்பு



இன்னும் 2 ஆண்டுகளில் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்று சீன மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் கணித்துள்ளனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஐ.நா. வெளியிட்ட புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவின் மக்கள் தொகை 137 கோடி ஆகும். சீனாவின் மக்கள்தொகை 143 கோடி.

இருப்பினும், 2050ஆம் ஆண்டுக்குள் இந்திய மக்கள் தொகையில் 27 கோடியே 30 லட்சம் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும், 2027ஆம் ஆண்டுக்குள் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்றும் ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது. ஆனால், ஐ.நா. கணித்த காலத்துக்கு முன்பே சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என்று சீன மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்பட்ட சீன மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்கள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

அதன்படி, சீன மக்கள்தொகை 141 கோடியே 18 லட்சம். அடுத்த ஆண்டு இது மேலும் குறையும் என்று கருதப்படுகிறது. மக்கள்தொகை சரிவால், தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்றும், நுகர்வு விகிதம் குறைந்து பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றும் அச்சம் எழுந்துள்ளது.

சீனாவில், வரும் ஆண்டுகளில் பிறப்பு விகிதம் மேலும் குறையும் என்றும், இந்தியாவில் பிறப்பு விகிதம் அதிகரிக்கும் என்றும் சீன மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் கணித்துள்ளனர்.

எனவே, ஐ.நா. கணித்த ஆண்டுக்கு முன்பே அதாவது 2023 அல்லது 2024ஆம் ஆண்டிலேயே சீன மக்கள்தொகையை இந்தியா மிஞ்சிவிடும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

சீனாவில் பிறப்பு விகிதம், தொடர்ந்து 4ஆண்டுகளாக குறைவாகவே உள்ளது. அங்கு குழந்தை பெறும் வயதுடைய பெண்கள் எண்ணிக்கையும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு, ஒற்றை குழந்தை கொள்கையை கைவிட்டு, 2 குழந்தைகள் பெற்றுக்கொள்ள சீனா அனுமதித்தது. தற்போது, கட்டுப்பாடுகளை சீனா முழுமையாக நீக்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

### கொரோனா விவகாரம்;

# இந்தியாவுடன் நெருங்கி பணியாற்றிவருகிறோம்

## அமெரிக்க வெளியுறவுத்துறை தகவல்

கொரோனா விவகாரத்தில் இந்தியாவுடன் நெருங்கி பணியாற்றி வருகிறோம்என்றுஅமெரிக்கவெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது அவர் கூறியதாவது:

கொரோனா விவகாரத்தில், இந்தியாவின் தொடர் தேவைகளை அடையாளம் காண இந்திய அதிகாரிகளுடனும், சுகாதார நிபுணர்களுடனும் பேசி வருகிறோம். அவர்களுடன் தொடர்ந்து நெருங்கி பணியாற்றி வருகிறோம்.

இந்தியாவுக்கு அமெரிக்க அரசின் நிதி உதவி 10 கோடி டொலர் ஆகும். இதுபோக, தனியார் அமைப்புகள் 40 கோடி டொலர் நிதிஉதவி அளித்துள்ளன.

இதுவரை 6 விமானங்கள் மூலம் இந்தியாவுக்கு மருத்துவ உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில், 20 ஆயிரம் ரெம்டெசிவிர் மருந்துகள், 1,500 ஒக்சிஜன் சிலிண்டர்கள், 550 நடமாடும் ஒக்சிஜன் செறிவூட்டிகள், 10 லட்சம் விரைவு பரிசோதனை கருவிகள், 25 லட்சம் என்95 ரக முகக் கவசங்கள், பல்ஸ் ஒக்சி மீற்றர்கள் ஆகியவை அடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே, அமெரிக்க செனட் உறுப்பினர் மார்க் வார்னர், அமெரிக்காவுக்கான இந்திய தூதர் தரண்ஜித்சிங் சாந்துவை தொடர்பு கொண்டு பேசினார். இந்தியாவுக்கு உதவ உறுதி பூண்டிருக்கின்றேன் என அவர் கூறினார். அவருக்கு இந்திய தூதர் நன்றி தெரிவித்துக் கொண்டார். இதுவரை 2 லட்சத்து 61 ஆயிரம் டோஸ் ரெம்டெசிவிர் மருந்துகளை அமெரிக்கா அனுப்பி வைத்ததற்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எல்லாவகையிலும் உதவுவோம் என்று அமெரிக்க பென்டகன் செய்தித்தொடர்பாளர் பீட்டர் ஹக்ஸ் கூறினார்.



இதற்கிடையே, தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், அமெரிக்கவாழ் தொழிலதிபருமான எம்.ஆர்.ரங்கசாமி கூறியதாவது:

சுதந்திரத்துக்கு பிறகு இந்தியா மிகப்பெரிய பிரச்சினையை சந்தித்து வருகிறது. இந்தியாவுக்கு உதவ 24 மணி நேரமும் நிதி திரட்டி வருகிறேன்.

ஒவ்வொருவரும் அதிகமாக உதவ வேண்டிய நேரம் இதுவாகும். இப்படிப்பட்ட பிரச்சினைகள் அடிக்கடி வரப்போவதில்லை. எனவே, எல்லோரும் அதிக அளவில் உதவ வேண்டும். அதுபோல், இந்தியாவில் உள்ள உங்கள் உறவினர்களுக்கும், குடும்பத்தினருக்கும் உதவுங்கள்.

இந்தியாவில் பரவும் உருமாறிய கொரோனா, மிகவும் ஆபத்தானது. அதை ஒடுக்காவிட்டால், நேபாளம், வங்காள தேசம், இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவி பெரிய உயிரிழப்பை ஏற்படுத்தும். இந்தியத் தரப்புடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். நிவாரண பொருள்களுக்கு இந்திய அரசு வரிவிலக்கு அளித்தமை பாராட்டத்தக்கது. இவ்வாறு அவர் கூறினார்.

---



# சூயஸ் கால்வாயை விரிவுபடுத்த திட்டம் தீட்டுகிறது எகிப்து அரசு

கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட கப்பல் விபத்துக்குப் பின்னர் சூயஸ் கால்வாயை விரிவுபடுத்த எகிப்து அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்நாட்டு அதிபர் அப்துல் பதா எல் சிசி மற்றும் எகிப்து அதிபர் சூயஸ் கால்வாய் ஆணையத்தின் தலைவர் ஒசாமா ராபி ஆகியோர் பேசும்போது, சூயஸ் கால்வாய் விரிவுபடுத்தப்படும் எனக் குறிப்பிட்டனர்.

சினாய் தீபகற்பத்தின் ஓரத்தில், கால்வாயின் தெற்கே நீளத்தை கிழக்கே சுமார் 40 மீற்றர் அகலப்படுத்துவது என்றும் தற்போதைய 66 அடி ஆழத்திலிருந்து 72 அடியாக ஆழப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் 19 ஆயிரம் கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாகச் சென்று வருகின்றமைது குறிப்பிடத்தக்கது.

---

# இந்தியாவில் உருமாற்றம் அடைந்த வைரஸ் 44 நாடுகளுக்கு பரவியது

இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தீவிரமாக பரவி வருகிறது. கடந்த வாரம் தினசரி பாதிப்பு எண்ணிக்கையானது 4 லட்சத்திற்கும் அதிகமாக பதிவான நிலையில், ஊர டங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக் கப்பட்ட நிலையில், தற்போது குறையத் தொடங்கி உள்ளது. எனினும் உயிரி ழப்பு அதிகமாகவே உள்ளது. இந்த அளவுக்கு வைரஸ் வேகமாக பரவு வ தற்கு முக்கியமான காரணம், இந்தியாவில் உருமாற்றம் அடைந்த வைரஸ்தான் என கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தியாவில் பரவ லாகக் காணப்படும் உருமாறிய கொரோனா வைரஸ் உலகளவில் 44 நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவுவதற்கு முக்கியக் காரணம் பி.1.617 எனும் உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ்தான். இந்த வைரஸ் கடந்த ஒக்டோபர் மாதம் முதன்முதலில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ்தான் தற்போது உலக சுகாதார அமைப்பின் 6 மண்டலங்களில் உள்ள 44 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை 4,500 மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தியாவைத் தவிர்த்து இந்தியாவில் உள்ள பி.1.617 உருமாறிய வைரஸ் பிரிட்டனில்தான் அதிகமாகக் கண்டறியப்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் பரவி வரும் பி.1.617 வகை உருமாறிய கொரோனா வைரஸ், மற்ற வைரஸ்களைவிட வேகமாக பரவுகிறது, உருமாற்றம் அடைந்துள் ளது என்று கூறியதுடன், அதன் குணங் களையும் பட்டியலிட்டு, கவலைத் தெரிவித்திருந்தது.

# சின்னங்களை அழிப்பதனூடாக உணர்வுகளை அழிக்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கண்டனம்



தமிழர்களுடைய உணர்வுகளை நினைவு சின்னங்களை இடித்து அழிப்பதன் ஊடாக தமிழர்களின் உணர்வுகளை அழிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த பொதுத்தூபி இனந்தெரியாத நபர்களினால் நேற்று இரவு சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இதுகுறித்து இன்று (வியாழக் கிழமை) வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், நேற்றைய தினம் இலங்கை இராணுவத்தினால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டிருக்கலாம் என்று நாங்கள் சந்தேகப்படுகின்றோம். முள்ளிவாய்காலிலே கொல்லப்பட்ட உறவுகளின் நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அது அங்கிருந்து அகற்றப்பட்டிருக்கின்றது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அரசாங்கமானது தொடர்ந்து தமிழர்களுடைய வரலாறுகளை, தமிழர்களுக்கு நினைவு கூரும் வாய்ப்பினை கூட இல்லாமலாக்கும் ஒரு அரசாங்கம்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் ஒன்று வந்ததன் பின்னர் சாதாரணமாக ஒரு உயிரிழந்த உறவுகளை கூட, அதாவது சில சில கொலைகளாக கூட இருக்கலாம், படுகொலைகளாக இருக்கலாம், மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற சில படுகொலைகள் விசேடமாக என்னுடைய பெரியப்பாவும் படுகொலை செய்யப்பட்டார் அவரினுடைய நினைவேந்தலைக் கூட அனுஷ்டிக்க என்னை தடை செய்து, நீதிமன்ற உத்தரவின் ஊடாக எனக்குத் தடை விதிக்கப்பட்டது.

அந்த வகையில் கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே கூட இவ்வாறாக ஒரு சம்பவம் நடைபெற்றது. ஆனால் அதை அந்த பல்கலைக்கழக உபவேந்தரே மீண்டும் கட்டி முடித்திருக்கின்றார்.

உண்மையிலேயே தமிழர்களுடைய உணர்வுகளை நீங்கள் இவ்வாறான நினைவு சின்னங்களை இடித்து அழிக்க முடியாது. நீங்கள் இடிக்கும் ஒவ்வொரு நினைவுச் சின்னமும் தமிழர் களுடைய மனங்களில் ஒரு புதிய உணர்வை ஏற் படுத்தும் ஒரு சம்பவமாகத்தான் நான் பார்க்கின் றேன்.

நீங்கள் எவ்வாறு தான் எங்களுடைய உணர்வுகளை தடுக்க முயற்சித்தாலும் நாங்கள் நடந்த எந்த விடயத்தினையும் மறக்க மாட்டோம். இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற எந்த அநீதியையும் நாங்கள் மறக்க மாட்டோம்.

விசேடமாக இந்த வாரம் 2009 ஆம் ஆண்டு எத்தனையோ ஆயிரக்கணக்கான உறவுகளை நாங்கள் இழந்திருந்தோம். அந்த உறவுகள் உயிரிழந்த திகதியோ, உயிரிழந்த இடமோ எங்களுக்குத் தெரியாத நிலையிலே கூட அனைவரையும் நினைவு கூர்கின்ற ஒரு இடமாக அந்த நினைவுச் சின்னத்தினை நாங்கள் கடந்த வருடங்களில் பயன்படுத்தியிருந்தோம். நீங்கள் தமிழர்களுடைய உணர்வுகளை அழிப்பதற்கு வேறு புதிய வழிகளை தேட வேண்டும். ஏன் என்றால் எங்களுடைய உணர்வுகளை உங்களால் அழிக்க முடியாது.

மிகவன்மையாக நான் இதை கண்டிக்கின்றேன். அதைப்போலத்தான் அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்ற எங்களுடைய தமிழ் பிரதிநிதிகளும் கூட இதுதொடர்பாக உங்களுடைய கண்டனத்தினை நீங்கள் தெரிவிக்க வேண்டும். இன்று நீங்கள் அரசாங்கத்துடன் இருந்தாலும் உங்களை தெரிவு செய்தது தமிழ் மக்கள் தான். உங்களை தெரிவு செய்த மக்களினுடைய உறவுகளும் கூட அந்த வாரத்திலே, அந்த மாதங்களிலே அந்த இறுதி யுத்தத்திலேயே நிச்சயமாக உயிரிழந்திருப்பார்கள்.

உங்களுக்கும் பொறுப்பொன்று உள்ளது. இவர்களை நினைவு கூர்வதற்கு நினைவுத் தூபிகளை இடிக்காமல் பாதுகாக்கின்ற முழுப்பொறுப்பொன்று உள்ளது. இந்த அரசாங்கம் தன்னுடைய இறுதி ஊர்வலத்திலே பயணிக்க ஆரம்பித்து விட்டது என்பதை நான் இந்த இடத்திலே சொல்ல விரும்புகின்றேன். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடத்திற்குள்ளேயே தன்னுடைய இறுதி ஊர்வலத்திலே பயணிக்க ஆரம்பித்து விட்டது. எனக் குறிப்பிட்டுள்ளார்.



# சம்மாந்துறையில் உலருணவு வழங்கல்

புனித ரமழானை முன்னிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் அனுசரணையுடன் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு கொவிட் 19 சுகாதார பின்பற்றுதலுடன் உலர் உணவு பொதி வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி, சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநரின் மகளிர் அபிவிருத்தி சமூக சேவை இணைப்பு செயலாளரும், ஸ்டார் லைஃப் மகளிர் அபிவிருத்தி நிறுவன தலைவருமான எம்.எம்.றபீக் தலைமையில் நேற்று நடைபெற்றது.

# திருக்குளிர்த்திச் சடங்கிற்கு பக்தர்கள் செல்வதற்கு தடை

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கின்போது பக்தர்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆலயநிருவாகிகள் பத்துப்பேருக்கு மட்டுமே வழமைபோல பாரம்பரிய சடங்கு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காரைதீவு உதவி பிரதேசசெயலாளர் எஸ்.பார்த்தீபன் காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற மக்கள்பிரதிநிதிகளது கூட்டத்தில் தெரிவித்தார். வரலாற்றுப்பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மனாலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கதவு திறந்து கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகி 25ஆம் திகதி செவ்வாய் அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடைய விருக்கிறது.

பாரம்பரிய சடங்கு என்பதால் அதை கிரமமாக அனைத்து சம்பிரதாயங்களையும் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பதிவுசெய்யப்பட்ட ஆலய- நிருவாகிகள் பத்துப்பேர் மாத்திரம் சடங்குகாலத்தில் ஆலயத்தில் பூரணமாகத் தங்கியிருந்து அதனைச் செய்யவேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருந்தது. கடைகளும் ஏனைய வெளிவிடயங்களும் தடை செய்யப்பட்டுள்ளன. நேர்த்திகள் செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அன்போடு ஒத்துழைக்க வேண்டும்.என்றார்.

# இரு குழுக்களுக்கிடையில் மோதல் இருவர் வாள்வெட்டுக்கு இலக்கு

மட்டக்களப்பு சந்திவெளியில் இரு குழுக்களுக்கிடையே மோதல் இடம்பெற்று இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்திவெளியில் பாலையடித்தோனா பகுதியில் நேற்று மாலை இரு குழுக்களுக் கிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினை கருத்து மோதல் காரணமாகவே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கருத்து மோதல் காரணமாக இடம்பெற்றவாள்வெட்டு தாக்குதலில் சம்பவத்தில் காயமடைந்த 21 வயது மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் இருவர் தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.



# வேகக் கட்டுப்பாட்டை இழந்து செங்கலடியில் வாகனம் விபத்து

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி - மாவடிவேம்பு பிரதான வீதியில் ஒட்டமாவடி பகுதியில் இருந்து ஏறாவூர் நோக்கிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்துள்ளது.

நேற்று இரவு 9.15 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. அதிவேகமும் சாரதியின் தூக்க கலக்கமுமே இவ் விபத்திற்கு காரணமாக விருந்துள்ளது என தெரிய வந்துள்ளது. வேகக் கட்டுப்பாட்டை இழந்து வான் வண்டி வீதியோர மின் கம்பத்தில் மோதியுள்ளது. எனினும் வண்டியில் பயணித்த இருவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

## அட்டாளைச்சேனையில் கொரோனாவால் ஒருவர் மரணம்

அட்டாளைச்சேனை பிரதேச வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் இன்று வியாழக்கிழமை மரணமடைந்துள்ளார் என அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அகிலன் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய காரியாலயப் பிரிவுக்கு உட்பட்ட தீகவாபி பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பெண் கொரோனாத் தொற்று காரணமாக அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

இதுவரை அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேசங்களில் கொரோனாத் தொற்றுடன் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் குறித்த தொற்றில் தீகவாபி கிராமத்தில் இருவரும் பாலமுனை கிராமத்தில் ஒருவரும் உள்ளடங்குகின்றார். அவர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பியனாகிறது மன்செஸ்டர் சிட்டி

## யுனைடட்டின் தோல்வியால் முடிவு உறுதியானது!

மன்செஸ்டர் யுனைடட் அடைந்த தோல்வியால் இங்க்லீஷ் பிரிமீயர் லீக் கால்பந்துத் தொடரில் மன்செஸ்டர் சிட்டி அணி சம்பியன் பட்டத்தை உறுதி செய்துள்ளது.

இங்கிலாந்தின் முக்கிய கால்பந்துத் தொடரான இங்க்லீஷ் பிரிமீயர் லீக்கில் 20 அணிகள் களம் கண்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தலா 38 ஆட்டங்களில் விளையாட வேண்டிய நிலையில் இப்போது 35, 36 ஆவது சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற போட்டியொன்றில் மன்செஸ்டர் யுனைடட் மற்றும் லெஸ்டர் சிட்டி அணிகள் மோதின. அதில் யுனைடட் அதிரடி காட்டினாலும் லெஸ்டர்தான் 2-1 என்ற கணக்கில் வென்றது. இந்தத் தோல்வியின் மூலம் மன்செஸ்டர் யுனைடட் அணிக்கிருந்த சிறிய வாய்ப்பும் பறிபோனது. அந்த அணி இதுவரை 35 போட்டிகளில் விளையாடி 70 புள்ளிகளைப் பெற்றுள்ளது. நேற்றைய ஆட்டத்தில் வென்றிருந்தால் 73 புள்ளிகளுடன் சம்பியன் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பினைத் தக்கவைத்திருக்க முடியும்.

ஆனால், மன்செஸ்டர் யுனைடட் தோற்றதால் முதலிடத்தில் இருக்கும் மன்செஸ்டர் சிட்டி அணி, கோப்பையைத் தட்டிச் சென்றுள்ளது. அந்த அணி இதுவரை 35 ஆட்டங்களில் விளையாடி 80 புள்ளிகளுடன் உள்ளது. எனவே இரண்டாவது இடத்தில் உள்ள மன்செஸ்டர் யுனைடட், மூன்றாவது இடத்திலிருக்கும் லெஸ்டர் சிட்டி ஆகியவை எஞ்சியுள்ள போட்டிகளில் வென்றாலும் முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு அவற்றுக்கு இல்லை. எனவே, மன்செஸ்டர் சிட்டி அணி 7 ஆவது முறையாக பிரிமீயர் லீக் சம்பியன் பட்டத்தைப் பெறுவது உறுதியாகியுள்ளது. தற்போதைய தொடரின் கடைசிச் சுற்று ஆட்டங்கள் மே 23 ஆம் திகதி நடைபெறும். நடப்பு சம்பியனான லிவர்பூல் அணி தொடரில் 6 ஆவது இடத்தில் உள்ளமை குறிப் பிடத்தக்கது.



# இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடர்

## ஒசாகாவை வீழ்த்தினார் ஜெசிகா பெகுலா



இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் முன்னணி வீராங்கனை ஒசாகா அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார். ஜோகோவிச், அஷ்லெ பார்டி ஆகியோர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இத்தாலி ஓபின் டென்னிஸ் போட்டித்தொடர் ரோம் நகரில் நடந்துவருகிறது. அதன் மகளிர் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்று ஆட்டங்களுக்கு முன்னணி வீராங்கனைகள் நேரடியாக தகுதி பெற்றிருந்தனர்.

அவர்களில் உலகின் இரண்டாம் நிலையிலுள்ள ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகாவும் 31 ஆவது இடத்திலுள்ள அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலாவும் மோதினர். டைபிரேக்கர் வரை நீண்ட முதல் செட்டை ஜெசிகா 7-6 என்ற கணக்கில் போராடி வென்றார். தொடர்ந்து நடந்த இரண்டாவது செட்டையும் 6-2 என்ற கணக்கில் அவர் எளிதில் கைப்பற்றினார். அதனால் ஒரு மணித்தியாலம் 27 நிமிடங்கள் நடந்த போட்டியில், ஒசாகா 0-2 என நேர் செட்களில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

சமீபத்தில் நடந்த மட்ரிட் ஓபினில் இரண்டாவது சுற்றிலும், மியாமி ஓபினில் காலிறுதியிலும் ஒசாகா தோற்று வெளியேறினார். அதே நேரத்தில் ஜெசிகாவைப் போன்று அவுஸ்ரேலியாவின் அஷ்லெ பார்டி, செக் குடியரசின் ப்ளிஸ்கோவா, அமெரிக்காவின் கோரி காஃப், ரஷ்யாவின் வேரா சவோனா, உக்ரைனின் எலினா, ஸ்பெயின் கொர்பினி ஆகியோர் நேற்று மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் செய்பியாவின் நோவக் ஜோகோவிச், ஒஸ்ரியாவின் டொமினிக் தீம், ஸ்பெயினின் ரொபர்டோ படிஸ்டா, கனடாவின் பெலிக்ஸ் அகெர், ரஷ்யாவின் அன்ட்ரே ரூபலேவ் ஆகியோர் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

### ஐ.சி.சி. டெஸ்ட் அணிகளின் தரவரிசை

# இந்தியா தொடர்ந்தும் முதலிடம்

ஐ.சி.சியினால் இன்று வெளியிடப்பட்ட புதிய டெஸ்ட் அணிகளுக் கிடையிலான தரவரிசையில் இந்திய அணி முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது. இரண்டாமிடத்தில் நியூசிலாந்து அணி இருக்கும் நிலையில் இங்கிலாந்து அணி அவுஸ்ரேலியாவைப் பின் தள்ளி, மூன்றாமிடத்தைப் பிடித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்திற்கு முன்னேறியுள்ள அதே நேரம், தென்னாபிரிக்கா ஏழாமிடத்தில் உள்ளது. முதலிடத்திலுள்ள இந்திய அணி 121 புள்ளிகளைப் பெற்றிருக்கிறது. இரண்டாமிடத்திலுள்ள நியூசிலாந்து ஒரேயொரு புள்ளியைக் குறைவாகப் பெற்றிருக்கிறது. இந்த இரு அணிகளும் ஜூன் 18 ஆம் திகதி சவுத்தாம்ப்டனில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன் கிண்ணத்துக் கான இறுதிப்போட்டியில் மோதவுள்ளன.



TEST TEAM RANKINGS

| RANK | PLAYER | RATING |
|---|---|---|
| 1 | INDIA | 121 |
| 2 | NEW ZEALAND | 120 |
| 3 ▲ (+1) | ENGLAND | 109 |
| 4 ▼ (-1) | AUSTRALIA | 108 |
| 5 | PAKISTAN | 94 |
| 6 ▲ (+2) | WEST INDIES | 84 |
| 7 ▼ (-1) | SOUTH AFRICA | 80 |
| 8 ▼ (-1) | SRI LANKA | 78 |
| 9 | BANGLADESH | 46 |
| 10 | ZIMBABWE | 35 |

இலங்கை அணியோடு தொடரைச் சமநிலைப்படுத்திக்கொண்ட மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணியை 2-0 என்ற கணக்கில் வென்றதன் மூலம் இரு இடங்கள் முன்னேறியிருக்கிறது. இப்போது அந்த அணி இருக்கும் ஆறாமிடமென்பது 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெற்றிருக்கும் சிறப்பான நிலையாகும்.

# சிங்கப்பூர் ஓபின் பட்மின்டன் தொடர் கைவிடப்பட்டது

சிங்கப்பூர் ஓபின் பட்மின்டன் போட்டித்தொடர் அங்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான கடைசித் தகுதிச் சுற்றாக இருந்த இது, கொரோனாப் பரவலின் அதிகரிப்பு காரணமாக ரத்துச் செய்யப்படுவதாகவும் மாற்றுத் திகதியிலும் அது நடத்தப்படாது என்றும் சர்வதேச பட்மின்டன் சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்திய ஓபின், மலேசிய ஓபின் தொடர்கள் பிற்போடப்பட்டுள்ள நிலையில் சிங்கப்பூர் ஓபினும் கைவிடப்பட்டிருப்பது ஒலிம்பிக்கிற்கு தகுதி பெறக் காத்திருந்த பல பட்மின்டன் வீர வீராங்கனைகளுக்குப் பின்னடைவாக அமைந்துள்ளது. குறிப்பாக, இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், முன்னாள் முதல் நிலை வீரர் ஸ்ரீகாந்த் ஆகியோர் ஒலிம்பிக் வாய்ப்பைப் பெறுவதற்காக இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்று தங்களது தரவரிசையை மேம்படுத்திக்கொள்ளும் முனைப்புடன் காத்திருந்தனர். ஆனால், சிங்கப்பூர் ஓபின் ரத்துச் செய்யப்பட்டுள்ளதன் மூலம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இவர்கள் கிட்டத்தட்ட இழந்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



# அஸாத் சாலிக்கு பாதிப்பு ஏதும் ஏற்பட்டால் குற்றப்புலனாய்வு திணைக்களமே பொறுப்பு!

## சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா காட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலியின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவருக்கு உடனடியாக வைத்திய சிகிச்சை அவசியப்படுவதாகவும், தேவையான வைத்திய வசதிகள் உடனடியாக வழங்கப்படாத காரணத்தால் அவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அஸாத் சாலி பாதிக்கப்பட்டால் அதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களமே பொறுப்புக் கூறவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அஸாத் சாலியின் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா, அஸாத் சாலியின் மனைவியின் அறிவுறுத்தலுக்கு அமைய உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பொறுப்பதிகாரி ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## தரநிர்ணய நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கைரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் நிஹால் ஜயதிலக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு கொரோனா கிளிநொச்சியில் தீவிரம்

கிளிநொச்சி – கண்டாவளை பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கண்டாவளை – கட்டைக்காடு கிராமத்தினைச் சேர்ந்த மாணவியொருவர் வெளிமாவட்டத்திலுள்ள பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்று வருகின்றார்.

மேலும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக குறித்த பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் வீடு திரும்பிய அவர், வீட்டிலேயே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதுடன் வீட்டாருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று (வியாழக்கிழமை) காலை வெளியாகிய அவர்களின் பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளில், 5பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என கிளிநொச்சி சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பைஸர் தடுப்பூசி வழங்கப்படுமாம்

பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றவுடன் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு அந்த தடுப்பூசி வழங்கப்படும் என சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப்பிரிவு பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி மற்றும் சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசிகளை 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்படவில்லை.

எனவே பைஸர் தடுப்பூசி கிடைக்கும் வரையில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பைஸர் தடுப்பூசி வயோதிபர்களுக்கு மிகவும் பொருத்தமானது என டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

## தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு மூன்று முத்திரைகள் வெளியிடப்பட்டன



தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு முத்திரை, முதல் நாள் உறை மற்றும் நினைவு பத்திரம் என்பன வெகுசன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவால் நேற்று புதன்கிழமை அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டது.

இம்முறை தேசிய வெசாக் தினத்தை வட மாகாணத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிகுந்த நயினாதீவு ரஜ மஹா விகாரையை மையமாகக் கொண்டு நடத்தப்பட இருந்தது.

அதன்படி, வரலாற்று சிறப்புமிக்க வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த விகாரைகளின் ஓவியங்கள் இந்த ஆண்டு தேசிய வெசாக் தின நினைவு முத்திரைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா சபுமல்கஸ்கட விகாரை, யாழ்ப்பாணம் கதுறுகொட விகாரை மற்றும் வவுனியா கமடுகந்த தலதா விகாரை ஆகியவற்றை மையமாகக் கொண்டு முத்திரை வடிவமைப்பாளர் பாலிதா குணசிங்க இந்த நினைவு முத்திரைகளை வடிவமைத்துள்ளார்.

10 ரூபா , 15 மற்றும் 45 ரூபா ஆகிய மதிப்பிலான மூன்று முத்திரைகள் இதன்போது வெளியிடப்பட்டன.

# கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை!

## யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தெரிவிப்பு




வடக்கு மாகாணத்தில் கொவிட் வைரஸ் தொற்று நிலைமை அதிகரித்துக் காணப்படுகின்றது. தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாட்டில் அதிகரித்துள்ள கொவிட் தொற்று நிலைமை காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், பி.சி.ஆர். பரிசோதனையை இரண்டு மடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கவுள்ளது. ஒரு நாளில் ஒரு தடவை மேற்கொண்ட பரிசோதனையை இனிவரும் காலத்தில் இரவு நேரத்திலும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாளாந்தம் 800 இற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு என்பது மிக முக்கியமானது.

சுகாதார நடைமுறைகள் மற்றும் சுகாதாரத்துடன் கூடிய பழக்க வழக்கங்களைக் கையாண்டு இந்தத் தொற்றிலிருந்து விடுபட வேண்டும் என்பதையும் நாங்கள் முக்கியமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது யாழ். குடாநாட்டில் தொற்று அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இலங்கையிலும் சரி யாழ் மாவட்டத்திலும் சரி தொற்று அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. வெளிநோயாளர் பிரிவுக்கு வருபவர்களுக்கு ஏதாவது நோய் அறிகுறிகள் சந்தேகத்துக்கிடமான முறையில் இருந்தால் அவர்கள் உடனடியாக அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து பி.சி.ஆர். பரிசோதனையும் அவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. அப்படிச் செய்யும் போதும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தின் கீழ் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி தனிமைப்படுத்தல் மையம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு போதுமான ஒட்சிசன் சிலிண்டர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கு தங்கி சிகிச்சை பெறுவோருக்குத் தேவையான வசதிகள், அம்புலன்ஸ் வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு நோயாளிக்கு ஒட்சிசன் தேவை என்றால் அவர்களை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## ஈதுல் பித்ர் பெருநாள் தினமாக நாளை வெள்ளிக்கிழமை அறிவிப்பு

ஷவ்வால் மாதத்துக்கான தலைப்பிறை நாட்டின் எப்பகுதியிலும் தென்படவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் இம்முறை ரமழான் மாதம் 30 தினங்களாக பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய நாடு பூராகவும் உள்ள முஸ்லிம்கள் நாளை (வெள்ளிக்கிழமை) ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாட உள்ளனர்.

## துறைமுக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுப்பு

கொழும்பு, மே 13

கொவிட் தொற்று பரவலால் நாடு மிகவும் ஆபத்தில் இருக்கும் நிலையில், துறைமுக நடவடிக்கைகள் எந்த வகையிலும் சீர்குலைய இடமளிக்கப்படமாட்டாது என இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் பணியில் ஈடுபடுத்தி, இதுவரையிலும் துறைமுக செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றோம் எனவும் அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற ஜெனரல் தயாரத்நாயக்க தெரிவித்தார்.

## ஹெரோயின் போதைப்பொருளுடன் வவுனியாவில் பெண் ஒருவர் கைது

வவுனியா, மே 13

ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் நேற்று புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் 45 வயதுடைய பெண்ணொருவரே தேக்கவத்தை பகுதியிலுள்ள அவருடைய வீட்டில் வைத்து போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.